பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 28 செவ்வாய்க்கிழமை 13.09.2022 கதிர் 199

## இம்மாதம் 19ஆம் திகதி விசேட அரச விடுமுறை

### மகாராணியின் இறுதிக்கிரியையை முன்னிட்டு

எதிர்வரும் 19ஆம் திகதியை விசேட அரச விடுமுறை தினமாக அரசு அறிவித்துள்ளது.

பிரிட்டன் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் இறுதிக்கிரியையை முன்னிட்டு, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனப் பொது நிர்வாகம் மற்றும் உள்துறை

☞2

# சர்வதேச குற்றவியல் மன்றில் சிறிலங்காவை நிறுத்துங்கள்!

### ஜெனிவா கருத்துரைப்பு அமர்வில் நேற்று நாடு கடந்த தமிழீழ அரசு இடித்துரைப்பு



ஜெனிவா,செப்ரெம்பர்13

சிறிலங்கா தொடர்பிலான ஐ.நாவின் 46/1 தீர்மானத்தை தாம் திட்டவட்டமாக நிராகரிப்பதாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்த சபையில், இனியும் தாமதிக்காது சிறிலங்காவை பொறுப்புக்கூற வைக்க ஐ.நா பாகாப்பு சபைக்கு பாரப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகளுக்கான அமைச்சர் வி.பி.லிங்கஜோதி நேற்று இடித்துரைத்துள்ளார்.

☞2

## மகஸின் உண்ணாவிரதக் கைதிகளில் ஐந்து பேர் மருத்துவமனையில் சேர்ப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 13 பேர், தமது விடுதலையை வலியுறுத்தி கடந்த 6 ஆம் திகதியிலிருந்து கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். இவர்களில் 5 பேரின் நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

☞2

## ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக மேற்குலகம் போர்க்கொடி



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மீள் பிரயோகம், அமைதிப் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் உள்ளடங்கலாக மிகமோசமடைந்து செல்லும் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51ஆவது கூட்டத் தொடரில் தீவிர கரிசனையை வெளிப்படுத்திய மேற்கு நாடுகள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதிசெய்வதிலும் மிகச்சொற்பளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டின.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது.

☞2

## மைத்திரியைத் தனிமைப்படுத்தி துமிந்தவும் அமைச்சராகுகின்றார்

### வஜிரவுக்கும் பதவி




புதிய அமைச்சரவை அமைச்சர்கள் நியமனத்தின் போது துமிந்த திஸாநாயக்க மற்றும் வஜிர அபேவர்தன ஆகியோருக்கும் அமைச்சரவை அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

துமிந்த திஸாநாயக்க ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் வஜிர அபேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். எதிர்வரும் நாட்களில் 12 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளதுடன், இவர்களைத் தவிர

☞

## முட்டையால் நீதிமன்றம் செல்லவுள்ளனர் 80 பேர்



நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த 80 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முட்டை ஒன்றுக்கு 50 ரூபா கட்டுப்பாட்டு விலை

☞2

## புளியங்குளத்தில் கோர விபத்து; மோ.சைக்கிளில் சென்ற நபர் பலி

(வவுனியா நிருபர்)



வவுனியா - புளியங்குளம் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வவுனியா நகர் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி புளியங்குளம் பாடசாலைக்கு முன்பாக சென்றுகொண்டிருந்த ஹயஸ் ரக வாகனம்

☞2

## இரு கால்களும் துண்டிக்கப்பட்ட நிலையில் வவுனியா தண்டவாளத்தில் ஆணின் சடலம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் ரயில் தண்டவாளத்துக்கு அருகில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று காலை தாண்டிக்குளம் பகுதியில் தண்டவாளத்தில் சடலம் ஒன்று காணப்படுவதை அவதானித்த மக்கள் அது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

☞2

## கைதிகள் தினத்தை முன்னிட்டு 417 பேருக்குப் பொதுமன்னிப்பு

கைதிகள் தினத்தை முன்னிட்டு 417 கைதிகள் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளர்.

நேற்று கைதிகள் தினத்தை முன்னிட்டு, அரசமைப்பின் 34 ஆவது சரத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அபராதம் செலுத்த முடியாத மற்றும்சிறிய குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை,

☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மகஸின்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மைப் பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த 2019ஆம் ஆண்டு, 2020ஆம் ஆண்டு ஆகிய காலப்பகுதிகளின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேரே மயக்கம் டைந்ததைத் தொடர்ந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## சர்வதேச ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் தொடங்கியுள்ள ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51 ஆவது கூட்டத்தொடரில் முன்வைக் கப்பட்ட சிறிலங்கா தொடர்பிலான அறிக்கையை ஒட்டிய கருத்துரைப்பின் போதே இந்நிலைப்பாடு வலியுறுத்தப் பட்டுள்ளது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மனித உரிமைகளுக்கான அமைச்சர் வி. பி. லிங்கஜோதி தனதுரையில் கூறியவை வருமாறு:-

சிறிலங்கா தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபை இதுவரை தீர்க்கமாக அணுகுமுறையில் செயல்படவில்லை என்று நாங்கள் நம்புகிறோம்.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப் பட்ட போர்க்குற்றங்களுக்கும், இனப்படுகொலைக்கும் சிறிலங்காவைப் பொறுப்புக் கூற வைக்க வேண்டும்.

சிறிலங்கா தொடர்பில் ஐ.நா. 30/1, 46/1 தீர்மானங்களை கொண்டு வந்த போதிலும் சிறிலங்கா எதனையும் கவனத்தில் கொள்ளவில்லை. செயற் படுத்துவதற்கான விருப்பத்தையே, நடைமுறைப்படுத்துவதற்கான சரியான திசையோ காட்டியிருக்கவில்லை.

போரின் போது படுகொலைக்கும், வலிந்தும் காணாமல் ஆக்கப்பட்டமை க்குமான நீதி தேடும் தமிழர்கள் அந்த முயற்சியில் மட்டும் விரக்தியை அடைய வில்லை, அதையும் தாண்டி, தமிழ் மக் களுக்கு எதிராகத் தொடர்ந்தும் தற்போது நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் விரக்தி அடைந் துள்ளனர்.

கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலையின் ஓர் அங்கமாக தமிழர் நிலங்களைத் தொடர்ந்து சிறிலங்கா ஆயுதபடைகளின் பாதுகாப்புடன், தொடர்ந்தும் அபகரித்து, சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டும் வருகின்றது.

சிறிலங்கா அரசாங்கத்துக்கும் மே லும் மேலும் காலஅவகாசம் கொடுக்கா மல், விரைந்து செயற்படுமாறு சபை யைக் கேட்டுக்கொள்வதோடு, தமிழர் களுக்கு எதிராக தொடரும் கட்டமைக் கப்பட்ட இனப்படுகொலையைத் தடுக்க வும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் வேண்டுகின்றேன்.

சிறிலங்காவைப் பொறுப்புக்கூற வைக்க ஐ.நா. பாதுகாப்பு சபைக்கு சிறிலங்காவைப் பாரப்படுத்தி சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துமாறு வேண்டுகிறோம். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும். - எனத் தெரிவித்திருந்தார்.

## இரு கால்கள்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், அது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள் ளனர்.

நேற்றிரவு பயணித்த ரயிலில் மோதுண்டு இரு கால்களும் துண்டிக் கப்பட்டதால், கடும் இரத்தம் ஏற்பட்டதன் காரணமாக குறித்த நபர் மரணித்தி ருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 45 வயது மதிக்கத்தக்க நபராவார்.

இதேவேளை, சடலத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நிறுத்தப் பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இம்மாதம் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சு அறிவித்துள்ளது. அன்றைய தினம், தேசிய துக்கதினமாக முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், அரசின் அத்தி யாவசிய சேவைகளை முன்னெ டுப்பதற்கு விசேட அரச விடுமுறை தினம் தடையாக இருக்கமாட்டாது எனப் பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## புளியங்குளத்தில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிரே வந்து கொண்டிருந்த மோட் டார் சைக்கிளில் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

பஞ்சநாதன் குகேந்திரன் (வயது 49) என்ற நபரே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜெனிவாவில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தொடர்பான, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையா ளரின் அறிக்கையைத் தொடர்ந்து உறுப்பு நாடுகள் தமது கருத்துக்களைத் தெரிவித்தன.

### நெதர்லாந்து

பொறுப்புக்கூறலைநிலைநாட்டுவதில் இலங்கை அடைந்துள்ள தோல்வி மற் றும் சிவில் அரச செயற்பாடுகளில் அதி கரித்துள்ள இராணுவமயமாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பில் அரசமைப்பு மறுசீரமைப்பின் ஊடாகவோ அல்லது புதிய அரசின் மூலமோ இன்னுமும் தீர்வு காணப்படாமை குறித்துக் கரிச னையை வெளிப்படுத்திய நெதர்லாந்து நாட்டின் பிரதிநிதி, தற்போது மிகமோச மான பொருளாதார நெருக்கடியின் விளைவாக வெகுவாகப் பாதிக்கப்பட்டி ருக்கும் இலங்கை மக்களுக்குத் தனது அனுதாபத்தையும் வெளிப்படுத்தினார்.

அதுமாத்திரமன்றி கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் என்பன தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப் படுத்துவதும் ஊழலை இல்லாதொழிப் பதும் அவசியம் என்றும் அவர் வலியு றுத்தினார்.

### பின்லாந்து

அதேவேளை அண்மையில் மாண வச் செயற்பாட்டாளர்களைக் கைது செய்வதற்குப் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் தீவிர கரிசனையை வெளிப்படுத்திய பின்லாந்து நாட்டின் பிரதிநிதி, அமைதி யான முறையில் போராட்டங்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்வதற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன் படுத்துவதை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருமாறும் வலியுறுத்தினார்.

மேலும் தற்போது இலங்கை மிகப் பெரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தி ருப்பதை ஏற்பதாகத் தெரிவித்த அவர், இருப்பினும் இந்நெருக்கடிகள் அவசிய மான மறுசீரமைப்புக்களை மேற்கொள் வதற்கான வாய்ப்பை வழங்கியிருப் பதாகவும் சுட்டிக்காட்டினார்.

### ஐரோப்பிய ஒன்றியம்

இலங்கை தற்போது முகங்கொடுத்தி ருக்கும் சவால்களை ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியப்பிரதிநிதி, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளடங் கலாக மனித உரிமைகள் உறுதிப்படுத் தப்படல் மற்றும் நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பாது காக்கப்படல் என்பவற்றின் அவசியம் குறித்து வலியுறுத்தினார். மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிர யோகம் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்படுவதுடன் அச்சட்டம் சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டி னார்.

### சுவிஸ்லாந்து

இலங்கை முகங்கொடுத்திருக்கும் மிகமோசமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் விளைவாகப் பெருமளவானோர் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டுக்கும் உணவுப்பாதுகாப்பற்ற நிலைக்கும் முகங்கொடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளமை தொடர்பில் சுவிஸ்லாந்து கரிசனையை வெளிப்படுத்தியது.

அதுமாத்திரமன்றி வடக்கு, கிழக்கு மக் கள் மிக நீண்டகாலமாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலியுறுத்தி வருகின்ற போதிலும், இவ்விடயத்தில் இன்னமும் மிகச்சொற் பளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள் ளது என்று சுட்டிக்காட்டிய சுவிஸ்லாந்து பிரதிநிதி, அது குறித்தும் அமைதிப் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் கள் குறித்தும் அதிருப்தியை வெளிப்படுத்தி னார்.

### பிரான்ஸ்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு இலங்கை அரசு முழுமையான ஒத்து ழைப்புக்களை வழங்க வேண்டும் என்றும், குறிப்பாக நாட்டின் நீதித்துறை யின் சுயாதீனத்தன்மையை வலுப் படுத் துவதுடன் சிவில் சமூக இடைவெளியை உறுதிப்படுத்தவேண் டும் என்றும் பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதி வலியுறுத்தி னார்.

### ஜப்பான்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மேற் கொள்வதற்கென முன்மொழியப்பட்ட தி ருத்தங்களை வரவேற்பதாகத் தெரிவித்த ஜப்பான் பிரதிநிதி, இருப்பினும் நாட்டில் அர்த்தமுள்ள நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்கு மேலும் பல முக்கிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அத்தோடு நாட்டின் மனித உரிமை கள் நிலைவரத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்கத்தயாராக இருப்பதாகவும் அவர் உறுதியளித்தார்.

### அமெரிக்கா

சட்டத்தின் ஆட்சி, நீதியை நாடுவதில் அனைவருக்கும் சமத்துவமான வாய்ப்பு, முக்கியமான கட்டமைப்புக்க ளின் சுயாதீனத்தன்மை என்பன ஜன நாயகக்கட்டமைப்பின் முக்கிய தூண் களாகும் என்றும், எனவே இலங்கை யானது முதலாவது நடவடிக்கையாக நாட்டில் நீண்டகாலமாக நிலவும் ஊழ லையும் தண்டனைகளிலிருந்து விலக் கீடுபெறும் போக்கையும் முடி வுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அமெ ரிக்காவின் பிரதிநிதி வலியுறுத்தினார்.

### பிரிட்டன்

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46/1 தீர்மானத்துக்கு அமைவாக பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதில் மிகச்சொற்பளவிலான முன்னேற்றங்களே அடையப்பட்டிரு ப்பதாகக் கரிசனை வெளியிட்ட பிரிட்டன், கடந்த 2020 ஆம் ஆண்டு உறுதியளிக் கப்பட்டவாறு உள்ளக பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று உருவாக்கப்படாத நிலையில் இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் முன்னெடுக்கப் பட்டுவரும் ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கை தொடரவேண்டும் என்று வலியுறுத்தியது.

### கனடா

இலங்கை தற்போது முகங்கொடுத்தி ருக்கும் நெருக்கடிகள் நாட்டின் மனித உரிமைகள் நிலைவரத்தை மேலும் மே ாசமடையச்செய்யும் என கனடா அதன் கரிசனையை வெளிப்படுத்தியது.

## முட்டையால்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது.

இந்நிலையில் பல்வேறு பகுதி களிலும் முட்டை ஒன்று 60 முதல் 65 ரூபா வரை விற்பனை செய்யப்ப டுகின்றது.

அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யப்படுவதால் நுகர்வோர் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குகின்ற னர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், நுகர்வோரின் முறைப்பாட்டுக்கு அமைய மேற் கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது, அதிக விலைக்கு முட்டையை விற்பனை செய்த 80 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த கிரியெல்ல தெரிவித்தார்.

## மைத்திரியை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய அமைச்சரவை அமைச் சர்களில் பெரும்பாலானவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து நியமிக்கப்படவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கைதிகள் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலைகளில் கூட்ட நெரிசலைக் குறைக்க புதிய வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும் எனத் தமது கடமை பொறுப்பேற்கும் நிகழ்வில் நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரி வித்தார்.

- விளம்பரங்களுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விஜேதாஸ மறந்த விடயங்கள்

அதிகாரங்களும் பதவிகளும் ஆள்களை – பிரமுகர்களை – அடியோடு மாற்றி விடுகின்றன. தங்கள் பதவி நிலைகளைத் தக்க வைப்பதற்காக கொள்கை நிலைப்பாட்டையே மாற்றிப் போடும் பிரமுகர்களைத் தாராளமாகக் காண்கிறோம்.

எண்பதுகளின் கடைசியிலும் தொன்னூறுகளின் ஆரம்பத்திலும் ஜனாதிபதி பிரேமதாஸாவின் ஆட்சிக் காலத்தில் கட்டவிழ்ந்த மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் அரச பயங்கரவாதத்திற்கு எதிராகக் கொதித்தெழுந்தவர் மஹிந்த ராஜபக் ஷ. அப்போது எதிர்க்கட்சி எம்.பியான அவர் மனித உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும் 'சம்பியன்' ஆக எல்லோராலும் பார்க்கப்பட்டார்.

நாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தை உலகின் கவனத்தை ஈர்க்கும் மையமான ஜெனிவாவின் ஐ.நா. மனித உரிமைகள் மன்றத்திற்கு கொண்டு போகும் ஆரம்ப முனைப்பில் ஈடுபட்ட முதன்மை அரசியல் தலைவர்களில் அவரும் ஒருவர். பிரேமதாஸா கால மனித உரிமை மீறல்கள், அடக்குமுறைகள், அடாவடித்தனங்கள் பற்றிய ஆதாரங்கள், படங்களோடு ஜெனிவா அமர்வுக்குப் புறப்பட்ட அவர் கொழும்பு விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு பெரும் நெருக்கடிகளுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாக்கப்பட்டார்.

அதன் பின்னர் நடந்தவை என்ன? அந்த நேர மனித உரிமை மீறலுக்கு எதிராகக் குரல் எழுப்பி, அதன் மூலம் அவரது கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. பின்பு அவரது ஆட்சிக் காலத்தில்தான் மோசமான யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் என்று இலங்கை – குறிப்பாக தமிழினம் – பேரழிவுகளையும் பெரு நாசங்களையும் சந்தித்தது. காட்டு மிராண்டித்தனமான அரச பயங்கரவாதம் அவர் ஆட்சியில்தான் – முன்னர் மனித உரிமைகளுக்காகப் போராடிய சம்பியனின் நிர்வாகத்தில்தான் – இந்த நாட்டில் கட்டவிழ்ந்தது.

அந்தக் கொடூரங்களுக்கு நியாயம் வேண்டி கடந்த 13 ஆண்டுகளாக ஜெனிவாவுக்கு அலைந்து கொண்டிருக்கிறோம். இன்னும் நீதி கிட்டவே இல்லை.

இப்போது ஜெனிவா அமர்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்யும் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷவும் கூட இந்த வகையில் மஹிந்த ராஜபக்ஷ வகையறாதான்.

இலங்கை தொடர்பில் ஜெனிவா அரங்கு நிறைவேற்றிய தீர்மானங்கள் இலங்கையில் இறைமையில் தலையீடு செய்யும் அப்பட்டமான உரிமை மீறல் என்று இப்போது வியாக்கியானம் செய்கிறார் அவர். சர்வதேச விசாரணையாளர்கள் சம்பந்தப்பட்ட பொறிமுறை நாட்டின் இறைமையில் தலையிடுவது, அதற்கு அனுமதிக்க முடியாது என்றும் சொல்லுகிறார். அவருக்கு இரண்டு விடயங்களை நினைவூட்ட வேண்டிய உள்ளது.

ஒன்று – ஜெனிவாவில் 30/1 தீர்மானம் சர்வதேச பங்களிப்புடனான விசாரணைப் பொறிமுறையையும் உள்ளடக்கி நிறைவேற்றப்பட்டபோது, அதற்கு அப்போதைய மைத்திரி – ரணில் அரசு தானும் சேர்ந்து அனுசரணைப் பங்களிப்பு வழங்கியது. அந்த அரசின் அப்போதைய நிதி அமைச்சரும் தாமே என்பதை விஜேயதாஸ ராஜபக்ஷ மறக்கக் கூடாது.

அடுத்தது – பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா பதவியில் இருந்து வல்வந்தமாகத் துரத்தப்பட்டபோது, அதை ஒட்டி நாடாளுமன்றத்தில் தனி நபர் பிரேரணை ஒன்றை 2012 இல் இதே விஜேயதாஸ ராஜபக்ஷ தாமாகச் சமர்ப்பித்தார். பிரதம நீதியரசர் விவகாரம் இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர்களுக்கு அப்பால், சர்வதேச நீதியரசர்களைக் கொண்டு விசாரிக்கப்பட வேண்டும் என அந்தப் பிரேரணையில் கூறியவர் அவர்தான். இப்போது மட்டும் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் பற்றிய விசாரணை விடயத்தில் அத்தகைய சர்வதேச தரப்பின் பங்களிப்பு நாட்டின் இறைமையை மீறும் செயலாக அவருக்குத் தோன்றுகின்றது.

எல்லாம் பதவி நிலையால் – அதிகாரத்தால் – வந்த தலைக் குழப்பங்கள்தான்...!

# நாட்டைச் சீரழித்தவர்களுக்கு அமைச்சு கொடுக்கின்றமை பைத்தியக்காரத்தனம்!

## அலவத்துவல காட்டம்



இந்த நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு கொண்டுசென்றவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி அலவத்துவல இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து மக்கள் எதிர்பார்த்த எந்த நிவாரணமும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் அலவத்துவல குற்றம் சாட்டினார்.

பிள்ளைகளுக்கு ஒரு வேளை கூட உணவளிக்க முடியாத நிலையில் பெற்றோர்கள் இன்று அநாதரவாக இருக்கின்றனர் எனவும் ஜே.சி.அலவத்துவல தெரிவித்தார்.

இந்த நாட்டை சீரழித்தவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்குவது பைத்தியக்காரத்தனம் எனவும் ஜே.சி அலவத்துவல தெரிவித்தார்.

# பிரதமரை மாற்றுவதற்கு எந்த தீர்மானமுமில்லை!



பிரதமரை மாற்றுவதற்கு எந்த தீர்மானமும் எட்டப்படவில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன மூத்த அரசியல்வாதி என்பதை தனது செயற்பாடுகள் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர்கள் அரசமைப்பு ரீதியாக நியமிக்கப்பட்டார்கள் என்றும் அவர்களின் வாகன செலவீனம் மிகவும் குறைவானது என்றும் அவர் கூறியுள்ளார்.

இராஜாங்க அமைச்சராக பதவியேற்ற தேனுக விதானகமகேவின் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

# ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கலந்துரையாடல்!



நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பது தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் நாயகம் கெனிச்சி யோகோயாமாவிற்கும் இடையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த கலந்துரையாடல் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படக்கூடிய அதிகபட்ச ஆதரவு மற்றும் அதனை பல்வேறு துறைகளுக்கு எவ்வாறு வழங்குவது என்பது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதாக அந்தப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நெருக்கடியைச் சமாளிப்பதற்கு வழங்கப்படக்கூடிய இருதரப்பு பலம் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் குழுவும் இதில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசுக்கு எதிராக ஜெனீவாவில் ஆர்ப்பாட்டம்!




இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டித்து ஜெனீவாவில் இலங்கையர்கள் சிலர் நேற்று (திங்கட்கிழமை) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் மூலம் போராட்டக்காரர்கள் மீது இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவருமாறு வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டங்களின்போது கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராட்டக்காரர்களை விடுவிக்குமாறும் இதன்போது அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தாயின் வழியில் கடமையைச் செய்வேன் புதிய பிரிட்டன் மன்னர் சாள்ஸ் அறிவிப்பு



லண்டன்,செப்.13

தனது தாய் வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்த தன்னலமற்ற கடமையைத் தாம் தொடர்வார் என இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய புதிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் ராணியாக இருந்த இரண்டாம் எலிசபெத், அண்மையில் உயிரிழந்தமையையடுத்து, அவருடைய மூத்த மகனான சார்ள்ஸ் மன்னராக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். ராணியின் இறுதிச் சடங்கு, வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அதனை ஒட்டிய பாரம்பரிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக, நாடாளுமன்றில் புதிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் உரையாற்றியிருந்தார். நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், 900 உறுப்பினர்கள் பங்கேற்றனர். அவர்கள் சார்பில் மறைந்த ராணிக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் உரையாற்றினார்,தன் இளம் வயதில் நாட்டின் ராணியாக பொறுப்பேற்றபோது, இந்த நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சிறந்த முறையில் பணியாற்ற என்னுடைய தாய் உறுதி ஏற்றார். தன்னலமில்லாமல் தன் கடைமையை நிறைவேற்றுவதை அவர் தன் வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்தார்.

என்னுடைய தாயின் வழியில், நம் அரசியல் சாசனத்தின் உயரிய கொள்கைகளை கடைப்பிடிப்பேன். தன்னமில்லாமல் கடமையை நிறைவேற்றுவதன் சின்னமாக ராணி விளங்குகிறார். அந்தப் பாரம்பரியத்தை, கடவுளின் அருளோடும், உங்களுடைய ஆலோசனையுடனும் தொடருவேன். நம் நாட்டில் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருப்பதற்கு காரணமாக இந்த நாடாளுமன்றம் விளங்குகின்றது. நம்முடைய உறவு எப்போதும் போல் சிறப்பாகவே இருக்கும். என அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

## உக்ரைன் அனல் மின் நிலையத்தை தாக்கி இருட்டடிப்பு செய்தது ரஷ்யா

### அதிபர் ஜெலன்ஸ்கி கண்டனம்..!!

உக்ரைனில் அனல் மின் நிலையம் மீது தாக்குதல் நடத்தி மின் விநியோகத்தை தடைப்படச் செய்த ரஷ்யப் படைகளுக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் போர் தொடுத்தது. இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ரஷ்யா தொடங்கிய இத்தாக்குதல் 6 மாதங்களைக் கடந்தும் நடைபெற்றுவருகிறது. இந்நிலையில் வடமேற்கு உக்ரைனில் இசியம் எனும் பகுதியில் இருந்து ரஷ்யப் படைகள் பின்வாங்கியுள்ளன என்றும், இது ரஷ்ய போரில் திருப்புமுனை என்றும் பல்நாட்டு ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன. இந்நிலையில், உக்ரைனின் கார்கிவ் நகரில் உள்ள அனல் மின் நிலையத்தைக் குறிவைத்து ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தின. இது குறித்து உக்ரைன் அதிபர் வொலொடிமிர் ஜெலன்ஸ்கி தனது ட்விட்டர் பக்கத்தில், ரஷ்ய இராணுவ வீரர்கள் பின்வாங்கிய நிலையில் விரக்தியில் கார்கிவ் அனல் மின் நிலையத்தைக் குறி வைத்து ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. அதுபோல் நீரேற்று நிலையங்களையும் குறிவைத்து தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

உக்ரைன் தனது கிராமங்களையும் நகரங்களையும் மீட்டுவருவதைப் பொறுக்க முடியாமல் முக்கிய கட்டமைப்புகளை நோக்கி ஏவுகணைகளை அனுப்புகிறது. எங்கள் மக்கள் மின்சாரமும், தண்ணீரும் இல்லாமல் தவிக்க வேண்டும் என்பதே அவர்களின் இலக்கு என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் மொஸ்கோ இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளதுடன், தாங்கள் திட்டமிட்டு பொதுமக்களை தாக்குவதில்லை என்றும் தெரிவித்துள்ளது. உக்ரைனில் தாக்குதலில் ஈடுபட்டுள்ள ரஷ்யப் படைகள் கடந்த மார்ச் மாதம் கீவ் நகரில் இருந்து பின்வாங்கியது. அதன் பின்னர் இசியம் பகுதியில் இருந்து ரஷ்ய வீரர்கள் ஆயுதங்களைக் கூட கைவிட்டுப் பின்வாங்கினர்.

இந்நிலையில், இந்த மாதம் ஆரம்பம் முதல், உக்ரைன் 3000 சதுர கி.மீ பரப்பளவை மீட்டுள்ளதாக உக்ரைன் இராணுவத் தலைமைத் தளபதி வலேரி ஜலுஜினி தெரிவித்துள்ளார். தொடர் பின்னடைவுகளை ஏற்க முடியாமல் ரஷ்யா இவ்வாறான தாக்குதல்களில் ஈடுபடுவதாக அமெரிக்காவும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும், உக்ரைனுக்கு இராணுவ உபகரணங்களை வழங்கி அமெரிக்கா உதவி வருவது குறிப்பிடத்தக்கது.

## இரு ஆண்டுகளின் பின் வெளிநாட்டுக்கு சீனத் தலைவர் ஜின்பிங் பயணமாகிறார்

### மோடி மற்றும் புடினைச் சந்திக்க வாய்ப்பு



பீஜிங்,செப்.13

சீன அதிபர் ஷீ ஜின்பிங், இரண்டு ஆண்டுகளின் பின்னர் தனது முதல் வெளிநாட்டு பயணமாக, கஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தானுக்கு செல்கிறார்.

இந்த பயணத்தின் போது அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

சீனாவின் பீஜிங்கை தலைமையிடமாக கொண்டு செயற்படும், எஸ்.சி.ஓ. எனப்படும் ாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடு, மத்திய ஆசிய நாடான உஸ்பெகிஸ்தானில் எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த அமைப்பில் சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான் ஆகியவை அங்கத்துக நாடுகளாக உள்ள நிலையில், ஈரானும் அதில் இணைய உள்ளது. இந்த மாநாட்டுக்குப் பின், அமைப்பின் தலைமை பொறுப்பை ஓர் ஆண்டுக்கு இந்தியா வகிக்க உள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நேரடியாக மாநாடு நடைபெறவுள்ள நிலையில், இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார். இந்த மாநாட்டில் சீன அதிபர் ஷீ ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின், பாகிஸ்தான் பிரதமர் பாஸ் ஷெரீப் உள்ளிட்டோர் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில், சீன அதிபர் ஷீ ஜின்பிங் இந்த மாநாட்டில் பங்கேற்பதை, அந்த நாட்டின் வெளியுறவுத் துறை உறுதி செய்துள்ளது. கஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தானுக்கு, வரும், 14 – 16 வரை அவர் பயணம் மேற் கொள்கிறார்.

கடந்த, 2020 முற்பகுதியில், மியான்மருக்கு ஜின்பிங் பயணம் செய்திருந்தார். அதன் பின்னர், கொரோனா வைரஸ் பரவலால், இரண்டு ஆண்டுகளாக அவர் எந்த வெளிநாடுகளுக்கும் செல்லவில்லை. உஸ்பெகிஸ்தானில் நடக்கும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் மாநாட்டுக்கு இடையே ரஷ்ய அதிபர் புடினை, ஜின்பிங் சந்திப்பார் என்று கூறப்படுகிறது. அதுபோல, பிரதமர் மோடியையும் அவர் சந்தித்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா – சீனா இடையே எல்லைப் பிரச்சினை தீவிரமாக உள்ள நிலையில், பல சுற்று பேச்சுகளுக்குப் பின் கிழக்கு லடாக் எல்லையில் இருந்து படைகளை திரும்பப் பெறும் நடவடிக்கை துவங்கியுள்ளது. இந்நிலையிலேயே, மோடி–ஜின்பிங் இடையே சந்திப்பு நிகழ்வது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.





# அ.தி.மு.கவின் முன்னாள் அமைச்சர்கள் இருவரின் 39 இடங்களில் ஒரே சமயத்தில் அதிரடிச் சோதனை!



## லஞ்ச ஒழிப்புத்துறையினர் இருநூறு பேர் அணி இன்று அதிகாலை முதலே தேடுதல், சோதனை

சென்னை,செப்.13

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலு மணி, விஜயபாஸ்கர் தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் இன்று அதிகாலை முதல் சோதனை நடத்தி வருகின்றனர்.

**எஸ்.பி. வேலுமணி**

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தவர் எஸ்.பி. வேலுமணி. இவரது வீடு மற்றும் தொடர்புடைய இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறையினர் இன்று சோதனை நடத்தி வருகின்றனர். சென்னை, செங்கல்பட்டு, தாம்பரம், காஞ்சிபுரம், சேலம், கோவை என 26 இடங்களில் இன்று காலை முதல் சோதனை நடைபெற்று வருகிறது.

கிராமப்புறங்களில் தெரு விளக்குகளை எல்.இ.டி. விளக்கு களாக மாற்றும் திட்டத்தில் தனக்கு நெருக்கமானவர்களின் நிறுவனங் களுக்கு ஒப்பந்தம் வழங்கி விதிகளை மீறி அரசு நிறுவனத்திற்கு சுமார் 500 கோடி ரூபா இழப்பீடு ஏற்படுத்தினார் என வழக்குப்பதிவு செய்து லஞ்ச ஒழிப்பு துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

**விஜயபாஸ்கர்**

அதேபோல், அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தவர் விஜயபாஸ்கர். அவர் தொடர்புடைய இடங்களிலும் லஞ்ச ஒழிப்புத்துறையினர் இன்று அதிகாலை முதல் சோதனை நடத்தி வருகின்றனர்.

சென்னை, சேலம், மதுரை உள்ளிட்ட மாவட்டங்க ளில் 13 இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது


தனியார் மருத்துவமனைக்கு விதிமுறைகளுக்கு முரணாக சான்றிதழ் வழங்கினார் என வழக்குப்பதிவு செய்யப்பட்டு விஜயபாஸ்கர் வீடு, தொடர்புடைய இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது.


தேசிய மருத்துவக்குழு விதிக்கு முரணாக திரு வள்ளூரில் இயங்கும் தனியார் மருத்துவமனைக்கு விஜயபாஸ்கர் சான்று தந்தார் எனப் புகார் எழுந்தது. இந்த புகார் தொடர்பான ஆவணங்களை கைப்பற்றிய லஞ்ச ஒழிப்புத்துறையினர் விஜயபாஸ்கருக்கு சொந்தமான 13 இடங்களில் சோதனை நடத்தி வருகின்றனர்.

எஸ்.பி. வேலுமணி, விஜயபாஸ்கர் வீடு மற்றும் தொடர்புடைய மொத்தம் 39 இடங்களில் அதிகாலை முதல் இரு நூறுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

இருவர் தொடர்புடைய இடங்களில் ஏற்கனவே வேறு வழக்குகளில் சில முறை சோதனை நடந்துள்ள நிலையில் தற்போது மீண்டும் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடத்தி வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

# வாகன மின் சார்ஜிங் பிரிவில் தீ தெலுங்கானாவில் எண்மர் சாவு





செகந்திராபாத்,செப்.13

தெலுங்கானாவில் இ-ஸ்கூட்டர் சார்ஜிங் பிரிவு ஒன்றின் தரை தளத்தில் நேற்றிரவு ஏற்பட்ட பெரும் தீ விபத்தில் சிக்கி 8 பேர் உயிரிழந்து உள் ளனர்.

தெலுங்கானாவின் செகந்திராபாத் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றின் தரை தளத்தில் மின்சார இரு சக்கர வாகனங்களுக்கு சார்ஜிங் செய்து கொள்ளும் வசதி அமைந்துள்ளது. இந்த நிலையில், அந்த பிரிவில் நேற்றிரவு திடீரென பெரும் தீ விபத்து ஏற்பட்டு உள்ளது. இதனால் ஏற்பட்ட கரும் புகை முதல் மற்றும் இரண்டாவது தளங்களுக்கும் சென்றுள்ளது.

இதில், ஹோட்டலில் தங்கியிருந்த நபர்களில் பலருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு உள்ளது. ஒரு சிலர் கீழே குதித்து சென்று தப்பியுள்ளனர். சிலரை அந்த பகுதியில் வசிப்பவர்கள் ஓடி சென்று மீட்டனர். அவர்கள் பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்து உள்ள னர் என ஐதராபாத் ஆணையாளர் சி.வி. ஆனந்த் தெரிவித்து உள்ளார்.

இதுபற்றி அறிந்து, தெலுங்கானா உள்துறை மந்திரி முகமது அலி வருத்தம் தெரிவித்தார். 'சம்பவம் பற்றி மாநில அரசு விசாரித்து வருகிறது. தீயணைப்பு வீரர்கள் முடிந்த அளவிலான சிறந்த பணியை செய்துள்ளனர். ஹோட்டலில் இருந்து பலரை மீட்டுள்ளனர். எனினும் பெரும் புகையால் சிலர் உயிரிழந்து உள்ளனர். சிலர் மீட்கப்பட்டு உள்ளனர்' - எனத் தெரிவித்து உள்ளார்.

# இந்தியா – சீனா எல்லையில் திட்டமிட்டபடி படை விலகல்



புது டில்லி,செப்.13

ஏற்கனவே திட்ட மிட்ட படி இந்திய - சீன எல்லையில் இருந்து படைகளைத் திரும்பப் பெறும் நடவடிக்கைகள் நடந்து வருவதாக, இந் திய இராணுவத்தின் தலைமை தளபதி ஜென ரல் மனோஜ் பாண்டே தெரிவித்தார்.

கிழக்கு லடாக் எல் லையில், 2020 மே ம ாதத்தில் சீனப் படைகள் அத்துமீற முயன்றன. இதனால் பாங்காக் ஏரி பகுதியில் இரு நாட்டு படைகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, எல் லையில் இந்திய, சீனப் படைகள் குவிக் கப்பட் டன.

பல சுற்று பேச்சுகளுக் குப் பின், எல்லையில், 15 ஆம் எண் ரோந்து பகுதி களான, காக்ரா, ஹொட்ஸ்பிரிங்கில் இருந்து படைகளை விலக் கிக் கொள்ள முடிவு செய் யப்பட்டது. கடந்த 8 ஆம் திகதி தொடங்கிய இந்தப் பணி நேற்று 12 ஆம் திகதிக் குள் முடியும் என்று கூறப்பட்டது.

கடந்த இரண்டு நாள் களாக கிழக்கு லடாக்கில் எல்லைப்பகுதி பாதுகாப்பு தொடர்பாக, இந்திய இராணுவத் தலைமை தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே நேரில் ஆய்வு செய்தார்.

புதுடில்லி திரும்பிய அவர், நேற்று நடந்த நிகழ்ச்சிக்குப் பிறகு நிரு பர்களிடம் பேசு கையில் ''எல்லையில் இருந்து படைகளை திரும்பப் பெறுவது, ஏற்கனவே தி ட்டமிட்டபடி நடந்து வருகிறது,'' என க் குறிப்பிட்டார்

## பிரி. ராணியின் கிரீடத்தை அலங்கரிக்கும்

# பூரி ஜெகநாதருக்குச் சொந்தமான கோகினூர் வைரத்தை மீளுங்கள்

### ஒடிசா அமைப்பு வலியுறுத்தல்

இந்தியாவிற்கு சொந்தமான கோஹினூர் வைரம், பிரிட்டன் படையெடுப்பின் போது அந்நாட்டிற்கு கொண்டு செல லப்பட்டது. மறைந்த பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் கிரீடத்தை அலங்கரித்த அந்த வைரத்தை மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என பல்வேறு தரப்பினர் சமூக வலைத்தளங்களில் கோரிக்கை விடுத்துள்ள னர்.

இந்நிலையில், ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஜெகன்னாத் சேனா என்ற அமைப்பு, கோகினூர் வைரம் பூரி ஜெகநாதர் ஆலயத்திற்கு சொந்தமானது என்று தெரிவித்துள்ளது.

பஞ்சாப் மன்னர் ரஞ்சித் சிங், ஆப்கானிஸ் தானை சேர்ந்த நாதிர் ஈவை போரில் தோற்கடித் தார் என்றும், இந்த வெற்றியின் நினைவாக பூரி ஜெகநாதருக்கு கோகினூர் வைரத்தை நன்கொடை யாக அவர் அளித்தார் என்றும் ஜெகன்னாத் சேனா அமைப்பாளர் பிரியதர்சன் பட்நாயக் தெரிவித்துள்ளார். எனினும் அந்த வைரம் உடனடியாக ஒப்படைக்கப்பட வில்லை, ரஞ்சித்சிங் மறைவுக்கு பின்னர் ஆங்கிலேயர்கள் கோகி னூர் வைரத்தை அவரது மகன் துலீப்சிங்கிடம் இருந்து பறித்துச் சென்றனர் என்றும் பட்நாயக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக பிரிட்டன் ராணிக்கு கடிதம் அனுப்பிய பிறகு, அக்டோபர் 19, 2016 அன்று பக்கிங்ஹாம் அரண்மனையிலி ருந்து தமக்கு ஒரு தகவல் வந்ததாக பட்நாயக் கூறியுள்ளார். இந்நிலையில் கோகினூர் வைரத்தை மீண்டும் இந்தியா கொண்டு வருவதற்கான செயல் முறையை எளிதாக்கும் நடவடிக்கையில் தலையிடுமாறு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முக்கு, பட்நாயக் மனு அனுப்பியுள்ளார்.





காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# கல்முனை வடக்கு பிரதேச செயலக மக்கள் தெற்கு செயலகத்துக்கு முன் ஆர்ப்பாட்டம்!






(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலத்துக்குட்பட்ட மக்களின் அடிப்படை உரிமைகளைத் தடுப்பதாகவும் அரச சேவைகளைப் பெறுவதிலும் தேவையில்லாது தலையிட்டு அநீதி இழைக்கப்படுவதாகவும் தெரிவித்து, அந்தப் போக்கை ஆட்சேபித்து கல்முனை தெற்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட தமிழ் மக்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தார்கள்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக செயற்பாடுகளில் தேவையற்ற விதத்தில் தலையீடு செய்வதோடு மக்களுக்கான சேவைகளைப் பெறுவதிலும் தடையாக இருக்கும் அதிகாரிகளுக்கு எதிராகவும் அந்தப் பிரதேச மக்கள் இன்று தங்கள் எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்முனை 01ம் கிராம சேவகர் பிரிவில் இருந்த அரச காணிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்ததளிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான உறுதிப் பத்திரங்களைக் கடந்த மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக வழங்காது முடக்கி வைத்திருந்தமைக்கு எதிராகவும் அந்த உறுதிப் பத்திரங்களை தற்போது கல்முனை தெற்கு ஊடாக பெற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விட்டமைக்கு எதிராகவும் இந்த மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கல்முனை வடக்கு பிரதேசத்திற்குட்பட்ட எங்களு டைய காணி உறுதிப் பத்திரங்களை கல்முனை வடக் பிரதேச செயலகத்துக்கு ஊடாகவே பெற்றுக் கொள்வோம் எனும் கோரிக்கையையும் இதன்போது மக்கள் முன் வைத்தனர்.

கல்முனை தெற்கு பிரதேச செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குச் சென்று தமது ம கஜரை பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் அவ களிடம் கையளித்திருந்மையோடு இந்த விடய தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபருக்குரிய மகஜ ஒன்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது.

## கிழக்கின் கல்விப் பெறுபேற்றை தக்க வைப்பது குறித்து ஆராய்வு




(ஹஸ்பர்)

இவ்வருடத்திற்கான உயர்தரப் பரீட்சையில் கிழக்கு மாகாணம் நாடளாவிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றது. அந்தப் பெறுபேற்றை மாற்றமடையாமல் நிலைநிறுத்துவதற்கான விசேட கலந்துரையாடலொன்று நேற்று திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் த.அனுராதா யஹம்பத் தலைமையில் நடைபெற்றது.

இதற்காக கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 17 கல்வி வலயங்களின் வலயக் கல்வி பணிப்பாளர்கள் அழைக்கப்பட்டனர். இங்கு மாகாண கல்வியமைச்சு இதுவரையில் மாகாணத்தின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், மாகாண ஒதுக்கீட்டின் கீழ் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர், கலந்துகொண்ட பிராந்திய கல்விப் பணிப்பாளர்களின் பணியைப் பாராட்டி ஆளுநரால் பாராட்டுக் கடிதங்களும் வழங்கப்பட்டன. .

இந் நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் துசித பி வணிகசிங்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண கல்வி செயலாளர், மாகாண கல்வி பணிப்பாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## ‘தற்கொலையை தவிர்ப்போம்!’ மனவெழுச்சி பயிற்சிப்பட்டறை




(நூருள் ஹுதா உமர்)

தற்கொலையைத் தவிர்ப்போம் எனும் தொனிப்பொருளின் கீழ் மனவெழுச்சி பயிற்சிப்பட்டறை நேற்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி. அப்துல் வாஜித் ஆரம்ப உரையை நிகழ்த்தினார். ’தற்கொலையைத் தவிர்ப்போம்!’ எனும் தொனிப் பொருளின் கீழ் மனவெழுச்சி பயிற்சிப்பட்டறையின் விரிவுரையை உளநலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே. நௌபல் நடாத்தினார்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாள பணிமனையின் பிரிவுத் தலைவர்கள், உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் இந் நிகழ்வு நடைபெற உள நலப்பிரிவு ஏற்பாடு செய்திருந்தது. பணிப்பாளரின் வழி காட்டலில் இவ்வாறான நிகழ்வுகள் உளநலப்பிரிவினால் சமூக மட்டத்திலும் முன்னெடுக் கப்பட்டு வருகின்ற து குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆசியக் கிண்ணத்தைச் சுவீகரித்த கிரிக்கெட் வலைபந்தாட்ட அணிகள் நாடு வந்தடைவு!







ஆறாவது தடவையாக ஆசியக் கோப்பையை சுவீகரித்த இலங்கை கிரிக்கெட் வீரர்களும், ஆறாவது தடவையாக ஆசிய வலைப்பந்தாட்டத்தில் ராணியாக முடிசூடிய இலங்கை வலைபந்தாட்ட வீரர்களும் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை நாட்டை வந்தடைந்தனர்.

இவர்களை வரவேற்கும் முகமாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் இரண்டு விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. நாட்டை வந்தடைந்த இரு குழுக்களும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து விசேட வாகன அணிவகுப்பில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சிங்கப்பூரில் நடைபெற்ற 12 ஆவது ஆசிய சம்பியன்ஷிப் வலைப்பந்தாட்டப் போட்டியில், இலங்கை வீரர்கள் இறுதிப் போட்டியில் 63 இற்கு 53 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் சிங்கப்பூர் அணியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், நேற்று காலை நாட்டை வந்தடைந்த ஆசிய வலைப்பந்து சம்பியன்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க மற்றும் விளையாட்டு அமைச் சின் அதிகாரிகள், இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளன அதிகாரிகள் மற்றும் வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் அடங்கிய சிறு குழுவினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அதனைத்தொடர்ந்து, ஆசியாவின் கிரிக்கட் கிங்ஸ் என்று அழைக்கப்படும் இலங்கை கிரிக்கெட் அணி நாட்டுக்குவருகைத்தந்தது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற 15ஆவது ஆசிய சம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் பலம் வாய்ந்த பாகிஸ்தான் அணியை 23 ஓட்டங்களால் தோற்கடித்து இலங்கை வீரர்கள் சம்பியன் பட்டத்தை சுவீகரித்திருந்தனர்.

இலங்கை வருவதற்காக டுபாய் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த தசுன் ஷனக தலைமையிலான இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு அங்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஏறக்குறைய ஆறு மணித்தியால விமான பயணத்தின் பின்னர் நாட்டை வந்தடைந்த ஆசிய கிரிக்கட் வீரர்களை வரவேற்கும் வகையில் விளையாட்டு அமைச்சும் இலங்கை கிரிக்கெட் நிறுவனமும் இணைந்து விசேட நிகழ்ச்சியொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

# கல்முனையில் தனியார் கல்வி நிலையங்களை ஒழுங்குபடுத்த மாநகரசபை தீவிர நடவடிக்கை

## கட்டணம், நேர காலம், சுற்றுச்சூழல் தொடர்பிலும் கட்டுப்பாடுகள் விதிப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை ஆள்புல எல்லையினுள் இயங்கி வருகின்ற தனியார் கல்வி நிலையங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக கிடைக்கப்பெற்று வருகின்ற முறைப்பாடுகளை கவனத்தில் கொண்டு, அவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் தெரிவித்துள்ளார்.

இதன்படி இப்பிரதேசங்களில் தனியார் கல்வி நிலையம் ஒன்றினை நடத்துவதாயின் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விதிமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை மாநகர சபை வெளியிட்டி யிருப்பதுடன் இவ்விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு வியாபார உத்தரவுப் பத்திர அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் கடல் அனர்த்த பாதுகாப்பு எல்லையிலிருந்து 100 மீற்றருக்கு அப்பால் அமைக்கப்பட்டிருப்பதோடு அனர்த்தங்கள் ஏற்படும்போது மாணவர்கள் இலகுவாக வெளியேறக்கூடிய நுழைவாயில்களும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இங்கு பிரத்தியேக வகுப்புக்கள் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணி வரையும் பிற்பகல் 3.15 மணி முதல் பிற்பகல் 6.15 மணி வரையுமே நடத்தப்பட வேண்டும்.

வகுப்புக்கள் நடாத்தப்படுகின்ற கட்டடத்தின் கூரையானது ஓடு வேயப்பட்டதாகவும் வெப்பமேற்றலை தவிர்க்கக் கூடிய அமைப்பில் அமைந்திருத்தல் வேண்டும். குறித்த கட்டடம் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக திறந்த காற்றோட்டம் உள்ளதாக அமைந்திருத்தல் வேண்டும்.

கதிரை, மேசைகள் வயது வித்தியாசத்திற்கு ஏற்ப சொகுசானவையாகவும் பாதுகாப்பானவையாகவும் இருத்தல் வேண்டும். ஆண், பெண் இருபாலாருக்குமுரிய மலசலகூட வசதிகள் வெவ்வேறாக அமையப் பெற்றிருத்தல் வேண்டும். மலசல கூட வசதியானது 25 மாணவர்களுக்கு ஒன்று என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தேவை ஏற்படின் கொவிட்-19, மற்றும் தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக உட்புறமாக தனிமைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளையும், அதன் கீழான வர்த்தமானி அறிவித்தல்களையும், சுகாதார விதிகளையும் அதனோடு தொடர்புபட்ட உப விதிகளையும் பின்பற்றல் வேண்டும்.

மாணவர்களுடைய வாகனங்கள், சைக்கிள்களைப் பாதையோரங்களில் நிறுத்திவைத்துபொதுப்போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக் கூடாது. தேவை ஏற்படின் தங்களுடைய வளாகத்தினுள்ளேயே வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்தி இருத்தல் வேண்டும். அத்துடன் அயலவர்களுக்கு இடையூறாக அமையக்கூடாது.

பாடசாலையில் பரீட்சை மற்றும் தவணை விடுமுறை வழங்கப்பட்டு, கட்டாயம் ஆகக்குறைந்தது ஒரு வாரகாலத்திற்கு பின்னரே தனியார் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மாதத்தில் வரும் எந்தவொரு பொது விடுமுறை தினத்திலும் வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளைகளிலும் வகுப்புக்களை நடத்துவது கூடாது.

ஒரு பாடம் ஆகக்குறைந்தது 50 நிமிடங்களுக்கு குறையாதவாறு நடாத்தப்பட வேண்டும். 50 நிமிடங்களுக்கு குறையாதவாறு நடாத்தப்படும் ஒரு பாடவேளைக்காக கட்டணம் தரம் 01 முதல் தரம் 05 வரையான வகுப்புக்களுக்கு ஆகக்கூடியது 40 ரூபாவும், தரம் 06 முதல் க.பொ.சாதாரண தரம் வரையான வகுப்புக்களுக்கு 50 ரூபாவும், க.பொ.உயர்தர வகுப்புக்களுக்கு 80 ரூபாவுமே அறவிடப்பட வேண்டும். அத்துடன் மாணவர்களிடம் சேர்வுக் கட்டணம் அறவிடப்படக் கூடாது.

கற்பிக்கின்ற பாடங்களின் நேர அட்டவணைகள், ஆசிரியர்களின் விவரங்கள் என்பன உறுதிப்படுத்தப்பட்டு கல்முனை மாநகர சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் போன்ற நிபந்தனைகள் கட்டாயம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என முதல்வர் ஏ.எம்.றகீப் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.09.2022இல் வெளியிடப்பெற்றது.